இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 22-07-2025

# பத்து தோல்வி பழனிசாமியின் ஆயிரம் பொய்கள்!

“அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி தமிழ்நாட்டு மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியாக வைத்திருந்தேன். எனது ஆட்சியில் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேறி இருந்தது” என்று பழனிசாமி நாள் தோறும் பேசி வருகிறார். அவர் தமிழ்நாட்டை அதளபாதாளத்தில் கொண்டு போனார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

7.12.2020 நாளிட்ட ‘இந்தியா டுடே’ ஏடு வெளியிட்ட ஆய்வு அறிக்கைப்படி ஐந்து ஆண்டுகளின் (2015-20) செயல்பாட்டில் 19 ஆவது இடம் தரப்பட்டது அ.தி.மு.க. ஆட்சிக்கு. 20 மாநிலங்களில் 19 ஆவது இடம். கடைசியில் இருந்து இரண்டாவது இடம் என்று வேண்டுமானால் பழனிசாமி பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

*** பழனிசாமி ஆட்சி எப்படி இருந்தது என்பதை அந்தக் காலக்கட்டத்து ‘இந்தியா டுடே’ வெளியிட்ட கருத்துக் கணிப்பின் மூலமாக நன்கு அறியலாம். 7.12.2020 நாளிட்ட ‘இந்தியா டுடே’ ஏடு வெளியிட்ட ஆய்வு அறிக்கைப்படி...**

*** உள்கட்டமைப்பில் 20 வது இடம்**

*** ஐந்து ஆண்டுகளின் செயல்பாட்டில் 19 வது இடம்**

*** விவசாயத்தில் 19 ஆவது இடம்**

*** சுற்றுலாவில் 18 ஆவது இடம்**

*** உள்ளடக்கிய வளர்ச்சியில் 18 ஆவது இடம்**

*** தொழில் முனைவோர் முன்னேற்றத்தில் 14 ஆவது இடம்**

*** ஆட்சி நிர்வாகத்தில் 12 ஆவது இடம்**

*** தூய்மையில் 12 ஆவது இடம்**

*** சுகாதாரத்தில் 11 ஆவது இடம்**

*** கல்வியில் 8 ஆவது இடம்**

– இதுதான் பழனிசாமி ஆட்சியில் தமிழ்நாடு இருந்த இடம். இதையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து வாய்ஜாலம் காட்டுகிறார் பழனிசாமி.

*** 2011 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இருந்தவை பழனிசாமிக்கு நினைவில் இருக்கிறதா?**

*** சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோர சாலைத் திட்டம்.**

*** தென் தமிழகத்தில் ‘ஏரோ பார்க்’.**

*** ஆன்லைன் வர்த்தகம் தடுக்கப்படும்.**

*** 10 ஆடை அலங்காரப் பூங்காக்கள்.**

*** திருப்பூர் சாயக் கழிவுகளைச் சுத்திகரிக்க விஞ்ஞானக் கழிவு அகற்றும் நிலையம்.**

*** 58 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவச பஸ் பாஸ்.**

*** மின்னணு ஆளுமையின் கீழ் அனைத்துக் காவல் நிலையங்கள்.**

*** விவசாயிகளைப் பங்குதாரர்களாகக் கொண்ட 6 ஆடை அலங்கார சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்.**

*** பள்ளிகளில் தாய்மொழியோடு பிறமொழிகள் பயில சிறப்புப் பயிற்சிகள்.**

*** நீதிமன்றங்களில் தமிழ்மொழி.**

*** தமிழில் படித்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை.**

*** வனவிலங்குகள் குடியிருப்பு, விவசாய நிலங்களுக்குள் புகுவதைத் தடுக்க நடவடிக்கை.**

*** தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை இரண்டு மடங்காக்குவோம்.**

*** மொபைல் மின்னணு ஆளுமைத் திட்டம்.**

– இவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை அ.தி.மு.க. ஆட்சியில். பழனிசாமிக்கு இவை ஏதாவது நினைவில் இருக்கிறதா?

*2016 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதையாவது நிறைவேற்றினார்களா? என்றால் அதுவும் இல்லை.

2016 தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டது நினைவில் இருக்கிறதா? **அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் செல்போன் விலையின்றி வழங்கப்படும், பெரிய பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களில், இலவச ‘வை-பை’ இணையதள வசதி வழங்கப்படும், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அம்மா இரு சக்கர வாகன பழுது பார்க்கும் பயிற்சி மையம் உருவாக்கப்படும்** – இப்படிச் சொன்னது எதையும் செய்யவில்லை.

அனைத்துப் பெண்களுக்கும் ஸ்கூட்டர் என்றார்கள். பின்னர் ஸ்கூட்டர் விலையில் 50 சதவிகிதமோ அல்லது 25 ஆயிரம் ரூபாய் இதில் எது குறைவோ அந்த தொகைதான் மானியமாகக் கொடுத்தார்கள். அதனால் ஸ்கூட்டர் வாங்கியவர்களுக்குப் பாதி தொகை வழங்கப்படவில்லை. ‘ஆதி திராவிடர் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு நீராவி கொதிகலன்களும் நீராவி இட்லி குக்கர்களும் வழங்கப்படும்’ என்று அறிவித்தார்கள். தரவில்லை. நரிக்குறவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பு முதல்வர் பழனிசாமி ஆட்சியில் உறங்கிக் கொண்டிருந்தது. ‘அம்பேத்கர் கொள்கையை பரப்ப 5 கோடியில் அம்பேத்கர் பவுண்டேஷன் நிறுவப்படும்’ என்ற அறிவிப்பு நகரவே இல்லை.

“ 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 6 தலைமை அரசு மருத்துவமனைகளிலும் கட்டணமில்லா கருத்தரிப்பு மையங்கள் 10 கோடியில் உருவாக்கப்படும்” என 2017 ஜூனில் அறிவித்தது அ.தி.மு.க. ஆட்சி. உருவாக்கவில்லை. அமெரிக்க சுதந்திர தேவி சிலை போல ரூ.100 கோடியில் மதுரையில் தமிழ்த்தாய்க்கு சிலை அமைக்கப்படும் என்றார்கள். செய்யவில்லை.

தனது சொந்தத் தொகுதிக்கு கொடுத்த வாக்குறுதியையாவது நிறைவேற்றினாரா என்றால் அதுவும் இல்லை.

**1. எடப்பாடி தொகுதியில் ஜவுளி பூங்கா**

**2. நெருஞ்சிப்பேட்டையில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம்**

**3. கொங்கணாபுரத்தில் தொழில்பேட்டை**

**4. மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் உபரி நீர் பயன்பாடு**

**5. எடப்பாடி அரசு மருத்துவமனை மேம்பாடு**

**6. கொங்கணாபுரம் கூட்டுறவு வங்கி விவகாரம்**

**7. மின் மயானங்கள்**

**8. தேங்காய், மா, பருத்தி, மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றுக்கு ஆதார விலை**

**9. பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையம்**

**10. நிலக்கடலை விவசாயிகளுக்கு தனிகூட்டுறவு சங்கம்**

– இவை அனைத்தும் பழனிச்சாமி, எடப்பாடித் தொகுதிக்குச் செய்து தருவதாகச் சொன்ன வாக்குறுதிகள். இதனை நிறைவேற்றித் தரவில்லை என்றுதான் அந்த தொகுதி மக்கள் குற்றம் சாட்டினார்கள்.

**நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல; தனது சொந்தத் தொகுதி மக்களுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றித் தராமல் தமிழ்நாட்டை தரை மட்டத்துக்கு இறக்கியவர்தான் பழனிசாமி.**



புதுடெல்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜ்ன கார்கே பிறந்த நாளையொட்டி, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா தலைமையில் கழக எம்.பி.க்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

### டி.ராஜா தலைமை! கே.ஜீவபாரதி தொகுத்துள்ள

# ‘காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்’ நூல்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் – கவிப்பேரரசு வைரமுத்து – இரா.முத்தரசன் – பெ.சண்முகம் பங்கேற்பு!

சென்னை, ஜூலை. 22-

கே.ஜீவபாரதி தொகுத்துள்ள ‘காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்’ நூல் வெளியீட்டு விழா வருகின்ற 28.7.2025 - திங்கள்கிழமை மாலை 4 மணியளவில் சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் டி.ராஜா தலைமை வகிக்கிறார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நூலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு விழா பேருரையாற்றுகிறார்.

நூலின் முதல் தொகுதியை தவத்திரு.குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரும் இரண்டாம் தொகுதியை கவிப்பேரரசு வைரமுத்துவும் பெற்றுக் கொள்கின்றனர்.

இவ்விழாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நூல் தொகுப்பாசிரியர் கே.ஜீவபாரதி ஏற்புரையாற்றுகிறார்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவன மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

### கீழடி அகழாய்வின் வரலாற்று உண்மைகளை

# ஆதாரங்கள் இருந்தும் ஒன்றிய அரசு ஏற்க மறுப்பது ஏன்?

## தயாநிதி மாறன் எம்.பி. ஒன்றிய கலாச்சாரத்துறை அமைச்சருக்கு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 22 -

கீழடி அகழாய்வு தொடர்பான, தமிழ்நாடு தொல்லியல் துறையின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை, இந்தியத் தொல்லியல் துறை திருத்தி அனுப்பச் சொல்வதற்கான, அறிவியல் பூர்வமான காரணங்கள் ஏதும் இருக்கின்றனவா? அறிவியல் முறைப்படி பகுப்பாய்வு செய்தும், ஆதாரங்களை அடுக்கியும், தமிழ்நாட்டின் பெருமையை, உலகிற்கு உரக்கச் சொல்லும் கீழடி அகழாய்வின் முடிவினை ஏற்றுக்கொள்ள முடியாமல், அதில் திருத்தம் மேற்கொள்ளச் சொல்லும் ஒன்றிய அரசின் நோக்கம் என்ன? என மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் ஒன்றிய கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் அவர்களிடம் நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக கேள்விகள் எழுப்பியுள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டிலிருந்து நடந்து வரும் கீழடி அகழாய்வு, கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் கைகளுக்கு மாறிய பிறகுதான், 5000க்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பண்டை கால தமிழ் மக்கள் இரும்பு பயன்படுத்தியதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அதன்படி பார்த்தால் தமிழ் நிலத்தில், 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு காலத்தைத் தொடங்கிய பெருமை தென்னிந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்குமே உரித்தானது.

### கீழடியில் அருங்காட்சியகம்!

இத்தகு கீழடியின் பெருமையை, தொன்மையை உலகறியச் செய்யும் வகையில், கடந்த 2023ஆம் ஆண்டு, சிவகங்கை அருகே, இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18.43 கோடி ரூபாய் செலவில் கழகத் தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கீழடி அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.



அவற்றை உலகளவிலான ஆய்வகங்களுக்கு அனுப்பி, கரிமப் பகுப்பாய்வில் காலக் கணக்கீடு செய்யப்பட்ட மாதிரிகள், Accelerator Mass Spectrometry (AMS) அறிக்கைகள், வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துகள் என பல சான்றுகள் இருந்தும், ஒன்றிய அரசு தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் புறந்தள்ளுகிறது. கீழடி அகழாய்வை இரண்டு கட்டங்களாக மேற்கொண்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அமர்நாத் ராமகிருஷ்ணனை திடீரென பணியிட மாற்றம் செய்தது ஏற்க முடியாதது.

ராஜஸ்தானில் பத்தே பத்து குழிகளைத் தோண்டி, சரஸ்வதி நதியைக் கண்டுபிடித்ததை ஏற்க முடிந்த ஒன்றிய அரசால், 102 குழிகள், 88 கார்பன் மாதிரிகள், 5700க்கும் மேற்பட்ட பொருட்களை அகழாய்வு செய்து கண்டறியப்பட்ட தமிழரின் தொன்மையான கீழடி நாகரீகத்தையும், ஆய்வு முடிவுகளையும், ஆதாரங்கள் இருந்தும், ஏற்றுக்கொள்ள மறுப்பதற்குக் காரணம் என்ன என மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் வருமாறு:-

கீழடி அகழாய்வு தொடர்பான, தமிழ்நாடு தொல்லியல் துறையின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை, இந்தியத் தொல்லியல் துறை திருத்தி அனுப்பச் சொல்வதற்கான, அறிவியல் பூர்வமான காரணங்கள் ஏதும் இருக்கின்றனவா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

### காலக்கெடு எவ்வளவு?

இந்தியத் தொல்லியல் துறை கேட்ட, திருத்தப்பட்ட அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு, தமிழ்நாடு தொல்லியல் துறைக்கு வழங்கப்பட்ட காலக்கெடு எவ்வளவு? என கேள்வி எழுப்பியுள்ளார்.

2024ஆம் ஆண்டு, ஜூன் 18ஆம் தேதியில் தொடங்கப்பட்ட 10ஆம் கட்ட அகழாய்வில், ஏற்கனவே ஆறு மண் குழாய்கள் மற்றும் பல்வேறு நகர்ப்புற குடியிருப்பு கட்டமைப்புகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. 10ஆம் கட்ட அகழாய்வில் எஞ்சியிருக்கும் பணிகளை மேற்கொள்ள இந்தியத் தொல்லியல் துறை வழங்கவுள்ள நிதியுதவி பற்றிய விவரங்கள் என்ன? என கேள்வி எழுப்பியுள்ளார்.

வருங்காலங்களில் வைகை நதிக்கரையோர தொல்பொருள் தளங்களில் நடைபெறும் அகழ்வாராய்ச்சிகளில் தமிழ்நாடு தொல்லியல் துறை மற்றும் இந்தியத் தொல்லியல் துறையை ஒருங்கிணைத்து, அறிவியல் ரீதியான உண்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக நிறுவப்படவுள்ள அமைப்பு குறித்த விவரங்கள் என்ன? என கேள்வி எழுப்பியுள்ளார்.

# திருவெறும்பூரில் அன்பில் அறக்கட்டளை சார்பாக வேலைவாய்ப்பு முகாம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பணி நியமன ஆணைகளை வழங்கினார்!

திருவெறும்பூர், ஜூலை 22 -

திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் அறக்கட்டளையின் நிறுவனருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது தொகுதி இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் அன்பில் அறக்கட்டளையின் மூலமாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு முகாமினை நடத்தி வருகின்றனர் .

மேலும் இதன் ஒரு பகுதியாக அன்பில் அறக்கட்டளையின் சார்பாக திருவெறும்பூர் முக்குலத்தோர் மேல்நிலைப் பள்ளியில் வேலைவாய்ப்பு முகாமானது நடைபெற்றது. இந்த முகாமில் சுமார் 120 க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் பங்கேற்றன. மேலும் இந்த முகாமில் சுமார் 3000 மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் முகாமில் சிறப்பு விருந்தினராக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மேலும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் அமைச்சர் உரையாற்றியதாவது:-

நமக்கான ஒரு வாய்ப்பை பயன்படுத்தி நம்மால் என்ன செய்ய முடியும் எனவும், குறிப்பாக இந்த சமுதாயத்திற்கு நம்மால் என்ன செய்ய முடியும் என தோன்றியதால் தான் புரவலர் அன்பிலார் அவரின் பெயரில் அன்பில் அறக்கட்டளையின் மூலமாக நம்மால் முடிந்தவரை மருத்துவ முகாமாக இருந்தாலும் சரி இது போன்ற வேலைவாய்ப்பு முகாமாக இருந்தாலும் 2016 ல் இருந்து கடந்த 10 ஆண்டுகள் வரை நம்மால் முடிந்த உதவிகளை இன்று வரை செய்து வருகிறோம் என்றும் எல்லோரும் பிறக்கின்றோம் எல்லோரும் மறைகின்றோம் என்றில்லாமல் நம்மால் முடிந்த உதவிகளை இளைய சமுதாயத்திற்கு செய்து வருவதாகவும், மேலும் நான் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களுக்குச் சென்று வந்தாலும் எனது சொந்த ஊரான திருவெறும்பூர் தொகுதியில் இந்த நிகழ்வு நடைபெறுவது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது என்றும் எனவே இந்த முகாமிற்கு வருகை புரிந்துள்ள அனைத்து இளைய சமுதாயத்தினரையும் நான் வரவேற்பதாகவும் இங்கு கலந்து கொண்டுள்ள இளைஞர்கள் ஒரு காலத்தில் பெரிய தொழிலதிபராக வரலாம் என்றும் அதற்கு அடித்தளமாக இருப்பது இந்த அன்பில் அறக்கட்டளை தான் என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்வதாகவும்,

நீங்கள் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அது ஒரு பறவைக்கு இரு சிறகுகள் உள்ளது அதில் ஒரு சிறகு தன்னம்பிக்கை மற்றொரு சிறகு விடாமுயற்சி என்றும் சொல்வார்கள்.

எனவே உங்களுடைய வளர்ச்சி நாட்டினுடைய வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்க வேண்டும்.

எனவே தமிழக முதல்வர் அவர்கள் கனவு திட்டமான நான் முதல்வன் திட்ட மூலம் சுமார் 30 லட்சம் பேருக்கு பல பயிற்சிகள் அளிக்கப்பட்டு தற்பொழுது இரண்டரை லட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற்று வருவதாகவும் இது போல் முதல்வர் கொண்டுள்ள திட்டங்கள் தான் எங்களுக்கு ஊன்றுகோலாக இருப்பதாகவும் இதனால் தான் நாங்கள் அன்பில் அறக்கட்டளையை நடத்தி வருவதாகவும் எடுத்துரைத்தார்.